**முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்**

**தெவ்வா பண்டிகை மற்றும் சங்க நிர்வாக குழு கூட்டம்**

**முக்கிமலை**

**11-7-2026**

நமது ஊரில் 11-7-2026 அன்று நமது கட்சி சார்பில் தெவ்வா பண்டிகை விமரிசியாக கொண்டாடப்பட்டது. நமது ஊரில் எழுந்தருளி இருக்கும் மகாலிங்கய்யாவும் பார்வதி தேவியும் நமக்கு அருள் நிறைந்த ஆசீர்வாதம் என்றைக்கும் நல்குவார்கள் என்று பிரார்த்திப்போம்.

சிறப்பான ஏற்பாடுகள் செய்த ஊர் சொந்தங்களுக்கும், சுவையான உணவு ஏற்பாடு செய்த நமது சகோதர சகோதரிகளுக்கும் ஊர் சார்பாகவும் சங்கத்தின் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் நடந்தது.

விழாவில் 60க்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டனர். நிர்வாக குழு கூட்டத்திலும் நிர்வாக குழு அங்கத்தினர்களை தாண்டி மற்ற சொந்தங்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஊர் தலைவர் திரு K சந்திரன் அவர்கள் நிர்வாக குழு உறுப்பினர்களையும் மற்ற சொந்தங்களையும் வரவேற்றார். சமீபத்தில் நடந்த அறுவை சிகிச்சை காரணமாக சங்கத் தலைவர் திரு J சந்திரன் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. சங்க உப தலைவர் திரு K அரசு அவர்கள் நிர்வாக குழு கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பல விஷயங்கள் பேசப்பட்டாலும், ஈமச்சடங்குகள் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் நடைமுறை பற்றி நடந்த விவாதமே பிரதானமாக இருந்தது.

நமது ஊர் சொந்தங்கள் தொடர்பான ஈமச்சடங்குகளில் கலந்து கொள்வது பற்றி கடந்த இரண்டு வருடங்களில் பல கூட்டங்களில் விவாதித்தும், அது பற்றிய தெளிவான பரிந்துரைகள் அளித்திருந்தாலும், அது சம்பந்தமான நடைமுறைகள் பற்றி அங்கத்தினர்கள் முன் வைப்பதால், அதனைப் பற்றி பிரதானமான விளக்கம் மற்றும் வழிமுறைகள் மீண்டும் பதிவு செய்ய வேண்டும் என்றும் அதன் தெளிவான விதிமுறைகள் படி வரும் காலங்களில் ஈமச்சடங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் இது போன்ற விஷயங்கள் பற்றி பொதுக்குழு மறுபரிசீலனை செய்யும் வரை, 11-7-2026 நிறைவேற்றப்பட்ட இந்த விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஒவ்வொரு வகையான ஈமச்சடங்கில் நமது சங்கம் எவ்வாறு கலந்து கொள்வது என்பது பற்றி கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. **அடுத்த கட்சியில் நடக்கும் மரண நிகழ்வுகள்:**
ஊர் ஒன்று பட வேண்டும் என்ற விருப்பத்துடன் "முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்ற சித்தாந்தத்துடன் ஆரம்பிக்கப்பட்டது நமது சங்கம். அனைவரின் மனதளவில் இந்த உயர்ந்த எண்ண ஓட்டங்கள் இருந்தாலும், நமக்கு அப்பாற்பட்ட பல சூழ்நிலைகள் காரணமாக இன்றைக்கு ஊரில் இரண்டு கட்சிகள் இருப்பது நிதர்சனம். இது முக்கிமலையில் மட்டுமல்ல; நீலகிரியில் பெருவாரியான கிராமங்களில் இது போன்ற சூழ்நிலை இருப்பதை பார்க்க முடியும். இது துரதிஷ்டமான நிலைமை என்றாலும், கட்சிகள் இருந்து வருவது நிதர்சனம் என்பதை அனைத்து அங்கனத்தினர்களும் உணர்கிறார்கள்.

   இப்படி இருக்கும் பொழுது அடுத்த கட்சியில் மரண நிகழ்வுகள் ஏற்படும்பொழுது, அதைப் பற்றிய தகவலை நமது வாட்ஸ் அப் குரூப் மூலம் உடனடியாக தற்பொழுது பதிவு செய்து வருகிறோம். இந்த நடைமுறை வரும் காலங்களில் தொடரும்.

   கடந்த காலங்களில் நமது கட்சியின் அங்கத்தினர்கள் அடுத்த கட்சி மரண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பொழுது தடுக்கப்பட்டது அனைவரும் அறிந்த உண்மை. சில நேரங்களில் தனி நபர்களுக்கு இதன் மூலம் அவமானமும் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி சங்க கூட்டங்களில் விவாதித்த பொழுது, கட்சியில் ஒரு நபருக்கு ஏற்படும் அவமானம் என்பது தனி நபர் அவமானமாக கருதக்கூடாது என்றும், அது நமது கட்சிக்கு ஏற்படும் அவமானம் என்பதால், அடுத்த கட்சியிடம் இருந்து என்றைக்கு நமது கட்சியினரும் அவர்களது கட்சியில் நடக்கும் ஈம சடங்குகளில் கலந்து கொள்ளலாம் என்று அதிகாரப்பூர்வ அழைப்பு வருகிறதோ அதுவரை, மரண நிகழ்வு அன்று ஈமச்சடங்குக்கு செல்வது உசிதமற்றது என்றும் ஈம கிரியை முடிந்த பின் அன்றைய நாளோ அல்லது வரும் நாட்களிலோ துக்கம் விசாரிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

   ஊரில் இருக்கும் நபர்கள் அன்றைக்கே போவது சாத்தியம்; ஆனால் கோயமுத்தூரில் வாழும் சொந்தங்கள் அவர்கள் சௌகரியத்திற்கு ஏற்ப துக்கம் விசாரிக்கும் நடைமுறை தற்பொழுது இருந்து வருகின்றது. இந்த தற்போதைய சுமுகமாக நடைமுறை தொடர வேண்டும் என்பதும் அனைவரின் விருப்பம்.

   கட்சி என்று இருந்தாலும் அடுத்த கட்சி நபர்கள் நமது முக்கிமலை சொந்தங்கள் என்ற முறையில் நாம் துக்கம் விசாரிக்க செல்லும்

பொழுது சகோதர பாசத்துடன் இருப்பது நமது முக்கிமலை சொந்தங்களின் பெருந்தன்மையை குறிக்கிறது என்பது நிதர்சனம்.

சமீபத்தில் அடுத்த கட்சியில் நடந்த கூட்டத்தில் அவர்கள் கட்சி சம்பந்தப்பட்ட மரண நிகழ்வு நடக்கும் பொழுது  சாவு முட்டுவதற்கு நமது கட்சி நண்பர்கள் சென்றால்  ஆட்சேபம் இல்லை என்று தெரிவித்ததாகவும், ஆனால் ஒரு சில நபர்கள் வந்தால் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று பேசியதாகவும் வாய்வழி தகவல்கள் வந்ததும் உண்மை. அனைவரும் செல்லலாமா, குறிப்பிட்ட நபர்கள் செல்லக்கூடாதா என்பது பற்றி நம் கட்சி சொந்தங்கள் தனிப்பட்ட முறையில் அடுத்த கட்சி சொந்தங்களை அணுகிய பொழுது எந்த தெளிவான விளக்கமும் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக முரண்பட்ட தகவல்களும் பேசப்பட்டதாக தெரிவித்தார்கள்.

இதுவரை அங்கு பேசப்பட்ட பரிந்துரை பற்றி ஒருவரும் அதிகாரப்பூர்வமாக நமது கட்சி தலைவருக்கு சொல்லவில்லை.  இப்படி இருக்கும் பட்சத்தில் நமது கட்சியில் ஒரு குறிப்பிட்ட நிலைப்பாடு எடுப்பது மிகவும் கடினம் என்பதையும் அங்கத்தினர்கள் சமீப காலத்தில் நினைவுகூர்ந்தனர்.

இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையில் அடுத்த  கட்சியில் மரணங்கள் நடக்கும் பொழுது நாம் ஏற்கனவே எடுத்த நிலைப்பாட்டில் நமது கட்சி அன்பர்கள் தொடர்ந்து வருகிறார்கள். இந்த குழப்ப நிலை பலரிடம் மன சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கின்றது என்பது உண்மை. இதை காரசாரமாக நிர்வாக குழு கூட்டம் விவாதித்து, தனி மனித விருப்பு வெறுப்புகளை கடந்து, நமது கட்சியின்  உறுதித் தன்மைக்காக எடுத்த முடிவு வருமாறு:

**அடுத்த கட்சியில் இருந்து நமது கட்சி  சொந்தங்கள் அவர்கள் கட்சியில் நடக்கும் ஈமச்சடங்கிற்கு வரலாம் என்று பேசி இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அடுத்த கட்சி தலைவர் நேரடியாகவோ அல்லது அவர்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ நமது கட்சி தலைவருக்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கோ அவர்கள் எடுத்த பரிந்துரையை அதிகாரப்பூர்வமாக  பகிரும் வரை இப்பொழுது இருக்கும் நடைமுறை தொடரும் என்பதை உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள்.**

**வாய் வழி செய்தியை கேட்டு நாம் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஏதாவது அவமானம் தனிநபருக்கு ஏற்பட்டால் அது  கட்சிக்கு ஏற்படும் அவமானம் என்ற நிலைப்பாட்டை முன்னிறுத்தி, அடுத்த கட்சி தலைவர் மூலம் அதிகாரப்பூர்வமாக அழைப்பு வரும் வரை இப்பொழுது உள்ள நிலைப்பாடு தொடரும் என்ற ஸ்திரமான முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவிற்கு**

**அனைத்து அங்கத்தினர்களும் கட்டுப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.**

மேற்கண்ட தீர்மானம் கட்சி என்ற முறையில் எடுக்கப்பட்ட தீர்மானம். ஆனால் அடுத்த கட்சியில் மரண நிகழ்வுகள் ஏற்படும் பொழுது அவர்களின் நெருங்கிய சொந்தங்கள் நமது கட்சியில் இருக்கும் பொழுது, அவர்கள் தாராளமாக செல்லலாம் என்ற தற்போதைய நடைமுறை தொடரும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

நமது கட்சியின் மற்ற அன்பர்கள் அடுத்த கட்சி மரண நிகழ்வுகளுக்கு செல்ல வேண்டுமென்று நினைத்தால் அதற்கு எந்த தடையும் இல்லை என்றும், அங்கத்தினர்கள் ஏற்கனவே உள்ள பரிந்துரையை நினைவு கூர்ந்தனர். தனி நபர்கள் அப்படி செல்லும் பொழுது ஏதாவது மரியாதை குறைவு ஏற்பட்டால் அதற்கு தனிநபரே பொறுப்பு என்றும் அதற்கு நமது கட்சி பொறுப்பேற்காது என்பதையும் நிர்வாக குழு வலியுறுத்தியது.

2. **திருமணமான ஊர் பெண்கள் மற்றும் மருமகன்கள் ஈமச்சடங்குகள்**

நமது ஊர் பெண்கள் திருமணமாகி மற்ற ஊர்களில் வசிக்கும் பொழுது அவர்கள் மற்றும் நமது மருமகன்கள் மரண நிகழ்வுகளில் தற்பொழுது நாம் பின்பற்றும் நடைமுறை தொடரும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அப்படிப்பட்ட நிகழ்வுகளில் ஊரிலிருந்தும் கோவையில் இருந்தும் அந்த ஈமச்சடங்குகளில் கலந்து கொள்ள வேண்டும் என்னும் நடைமுறை தொடரும் என்றும் வலியுறுத்தப்பட்டது

3. **திருமணம் ஆகாத ஊரில் இருக்கும் சகோதரிகள் ஈமச்சடங்குகள்**

திருமணமாகாத ஊரில் இருக்கும் சகோதரிகள் நமது அங்கத்தினர்களின் சகோதரிகளாக இருக்கும் பொழுது, பின்பற்ற வேண்டிய வகைமுறைகளை கூட்டம் முன் வைத்தது.

ஒரு அங்கத்தினர் அந்த சகோதரியிடம் வாழும் காலங்களில் சுமுகமான உறவுமுறை இருக்கின்றதோ இல்லையோ என்று ஆராய அவசியமில்லை. அவரது மரண நிகழ்வு ஏற்படும் பொழுது, அங்கத்தினரின் சகோதரி என்ற முறையில் அந்த ஈமச்சடங்கை நமது கட்சி மூலம் நடத்த வேண்டும் என்று அங்கத்தினர் விரும்பினால் அவரது கோரிக்கையை மதித்து ஈமச்சடங்கை நம் கட்சி முன்னின்று நடத்தி அதற்கு ஏற்படும் அனைத்து செலவினங்களையும் சங்கம் ஏற்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதே நேரம் திருமணமாக சகோதரியின் ஈமச்சடங்கு அடுத்த கட்சி மூலம் நடத்தப்படும் பொழுது, நமது கட்சியை பொறுத்தவரையில் அது அடுத்த கட்சியில் நடத்தும் ஈமச்சடங்கு என்றே கருத வேண்டும் என்றும், அந்த சகோதரியின் சகோதரர் நமது சங்கத்தில் இருக்கும்

பொழுது அவரை துக்கம் விசாரிக்க அன்று ஈமச்சடங்குகள் முடிந்த பின்னரோ அல்லது தொடர்ந்த நாட்களிலோ நாம் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மரண நிகழ்வு அன்றே செல்லும் பொழுது அடுத்த கட்சி மூலம் ஏதாவது சங்கடங்கள் - பேச்சின் மூலமோ அல்லது செய்கைகள் மூலமா - ஏற்படும் பொழுது, அதன் மூலம் நமது அங்கத்தினருக்கு தர்ம சங்கடங்கள் கொடுக்கக் கூடாது என்பதற்காக ஈமச்சடங்குகள் முடிந்த பின்பு நமது அங்கத்தினரை தொடர்பு கொள்ளலாம் என்ற நடைமுறை ஏற்புடையது என்றும் இதையே வரும் காலங்களிலும் பின்பற்ற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**உதவித்தொகை:** திருமணம் ஆகாத சகோதரியின் ஈமச்சடங்கு அடுத்த கட்சியில் இருக்கும் சகோதர்கள் நடத்தினாலும் நமது சங்க அங்கத்தினர் என்ற முறையில் மரண நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட செலவை ஏற்பதற்கு நமது சங்கம் மூலம் ரூபாய் 5,000 உதவித்தொகை வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

4. **சகோதரர் மற்றும் தாய் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள்**

மேற்கண்ட விதிமுறைகள் நம் சங்கத்தில் இருக்கும் உறுப்பினர்களின் சகோதரர் மரண நிகழ்வுக்கும் பொருந்தும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் சகோதரர் அடுத்த கட்சியில் இருக்கும் பொழுது அவரது ஈமச்சடங்கை நமது கட்சி நடத்த வேண்டும் என்று அவரது சகோதரர்கள் நமது சங்க உறுப்பினர்களாக இருக்கும் பட்சத்தில் சங்கத்தை கேட்டுக் கொண்டால் நாம் முன் நின்று அனைத்து செலவுகளையும் ஏற்று சங்கமே ஈமச்சடங்கு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

நமது சங்க உறுப்பினரின் தாய் மரணம் அடையும் பொழுது அடுத்த கட்சியில் உள்ள அவர் சகோதரர் தாயின் ஈம சடங்கை அடுத்த கட்சி மூலமாக நடத்தும் பொழுது அடுத்த கட்சி மரண நிகழ்வுகளுக்கு நாம் எப்படி துக்கம் விசாரிக்க செல்கின்றோமோ அதே போன்று இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதே நேரத்தில் அங்கத்தினர் தனது தாயின் ஈமச்சடங்கை நமது சங்கம் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டால், நாம் முன் நின்று அனைத்து செலவுகளை ஏற்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது

**உதவித்தொகை:** அடுத்த கட்சி மூலம் தாயின் மரண ஈமக்கரியை நடத்தும் பட்சத்தில் நமது அங்கத்தினருக்கு ரூபாய் 10,000 உதவித்தொகை வழங்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் இனிவரும் நாட்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இதில் தனிநபர் பற்றிய விதிவிலக்குகள் மற்றும் மாற்றங்கள் செய்யக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நமது அங்கத்தினர்கள் ஒற்றுமையாக இருப்பதும், ஒவ்வொருவரும் அன்பு காட்டுவதும் தனிநபர், நமது கட்சி மற்றும் அடுத்த கட்சி என்ற முறையில் என்றைக்கும் இருக்கும். ஆனால் அடுத்த கட்சி என்று வரும் பொழுது நமக்கு விருப்பம் உள்ளதோ இல்லையோ, நமது கட்சியின் கட்டுப்பாட்டையும் விதிமுறைகளையும் பின்பற்றினால் மட்டும் சங்கம் சிறப்பாக செயல்படும் என்று அங்கத்தினர்கள் வலியுறுத்தினர்.

5. **சகோதரி மரண உதவித்தொகை:** மேற்கண்ட தீர்மானங்களின் படி சமீபத்தில் மறைந்த சகோதரி தேவகியின் சகோதரர் சங்க அங்கத்தினர் திரு J நகுலன் அவர்களுக்கும், தேவகியின் மைத்துனியும் சங்க உறுப்பினருமான திருமதி பார்வதி கணேசன் அவர்களுக்கும் நமது சங்கத்தின் சார்பாக தலா 5,000 ஈமக்கரியை செலவுகள் என்ற வகையில் வழங்கப்படும் என்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

6. **மருத்துவ உதவித்தொகை:** மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஊர் பெரியவர் திரு K K ராமன் அவர்களுக்கு மருத்துவ உதவி வகையில் ரூபாய் 5,000 வழங்க தீர்மானிக்கப்பட்டது. வரும் நாட்களில் சங்கம் ஏற்கனவே தீர்மானித்ததுபடி மருத்துவ உதவி பெறாத அங்கத்தினர்கள் தங்கள் குடும்பத்தில் மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் சங்கத்தை அணுகி உதவித் தொகையான ரூபாய் 5,000 ஒருமுறை பெறலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது .

7. **ஆண்டு விழா:** சங்கத்தின் ஆண்டு விழா ஆகஸ்ட் மாதம் 2ஆம் தேதி வீரபாண்டியில் உள்ள மீரா மஹாலில் நடத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அன்பர்கள் காலை 9 மணிக்குள் விழா வளாகத்திற்கு வந்து விட வேண்டும் என்றும், கூட்டம் சரியாக காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

   ஆண்டு விழாவிற்கு இதுவரை நன்கொடை கொடுத்த அன்பர்கள் பட்டியலில் ஊர் தலைவர் திரு K சந்திரன் அவர்கள் - ரூபாய் 5,000, சங்கத்தின் உப தலைவர் திரு K அரசு - ரூபாய் 5,000, நிர்வாகக் குழு உறுப்பினர் திரு K ராமச்சந்திரன் அவர்கள் - ரூபாய் 5,000 வழங்குவதாக கூட்டத்தில் தெரிவித்தனர். இதுவரை ஆண்டு விழாவிற்காக ரூபாய் 26,000 (சங்கத் தலைவர் திரு J. சந்திரன் - ரூபாய் 10,000, டாக்டர் N. ராஜன் - ரூபாய் 10,000, திரு அமரர் K. ராஜு கவுடர் குடும்பத்தார் - ரூபாய் 4,000, புரவலர் K மணி - ரூபாய் 2,000) பெறப்பட்டுள்ளது. ஆண்டு விழாவிற்கு நன்கொடை அளிப்பதாக திரு பெள்ளி கவுடர் குடும்பம் - ரூபாய் 10,000, மற்றும் 11-7-2026 கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட நன்கொடை மூலம், ஆண்டு விழாவிற்கு இதுவரை ரூபாய் 51,000 வரவு வரும் என்பதும் வரவேற்கத்தக்கது. ஆண்டு விழாவிற்காக அனைத்து சொந்தங்களும்

தங்களால் முடிந்த நன்கொடையை அளிக்குமாறு
கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**8.** 2025-2026 ஆண்டிற்கு இதுவரை 33 அங்கத்தினர்கள் தங்களது ஆண்டு சந்தாவை செலுத்தி இருக்கிறார்கள். மீதி உறுப்பினர்கள் ஆண்டு விழாவிற்கு முன்பு தங்களது சந்தாவை செலுத்தினால் சிறப்பாக இருக்கும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

**9.** நமது கட்சி சார்பாக கீழ் குந்தா கோவில் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்கு பங்களிப்பாக ரூபாய் 5,000 அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**10.** ஊரில் கோயில் கதவு செய்தது போல பொது காரியங்கள் நடக்கும் பட்சத்தில், நமது ஊர் சொந்தங்களின் பரிந்துரைகளின் பேரில், நிர்வாக குழு ஒப்புதலுடன் அதற்கான பங்களிப்பை நம் சங்கத்தின் மூலம் அளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் சங்க செயலாளர் திரு சுப்பிரமணி நன்றி உரை சொல்ல கூட்டம் இனிதாக முடிந்தது.